**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேவகோட்டை.**

**முன்னிலை:- செல்வி. D. பூர்ணிமா, B.A.B.L.(Hons.),LL.M.,**
**நீதித்துறை நடுவர், தேவகோட்டை.**

**2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22-ம் நாள் புதன்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057 விசுவாவசு வருடம் சித்திரை திங்கள் 09-ம் நாள்**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 155/2023**
(குற்ற எண்.03/2022, திருவேகம்புத்தூர் காவல் நிலையம்)

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
திருவேகம்புத்தூர் காவல்நிலையம்,
குற்ற எண்.03/2022.

….குற்றமுறையிடுபவர்

/எதிராக/

1.கதிர்வேலன் (எ) கதிர்வேல் (1வது எதிரி) (27/2022)
த/பெ. கருப்பையா

2. கருப்பையா (2வது எதிரி) (55/2022)
த/பெ. பெரியராஜா

3. கலையரசி (3வது எதிரி) (45/2022)
க/பெ. கருப்பையா

4. ராதிகா (4வது எதிரி) (28/2022)
க/பெ. ரமேஷ்

…..எதிரி

குற்றவியல் நடைமுறை விதிகள், 2019 விதி 106(4)ன் படி வழக்கின் சுருக்கம்

| வ.எண் | விளக்கம் | விபரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | காவல் உதவி ஆய்வாளர், திருவேகம்புத்தூர் காவல்நிலையம், |

| | | | |
|---|---|---|---|
| | | குற்ற எண்.03/2022. | |
| 2. | எதிரிகள் | 1.கதிர்வேலன் (எ) கதிர்வேல் (1வது எதிரி)<br>த/பெ. கருப்பையா<br><br>2. கருப்பையா (2வது எதிரி)<br>த/பெ. பெரியராஜா<br><br>3. கலையரசி (3வது எதிரி)<br>க/பெ. கருப்பையா<br><br>4. ராதிகா (4வது எதிரி)<br>க/பெ. ரமேஷ்<br>**1 முதல் 4 வரையிலான எதிரிகளின் முகவரி:**<br>பின்னலாங்கோட்டை,<br>தேவகோட்டை தாலுகா,<br>சிவகங்கை மாவட்டம். | |
| 3. | குற்றச்சாட்டுகள் | 1, 2வது எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 294(b), 326, 323, 506(2) மற்றும் பிரிவு 4 of TNPHW Act-ன் கீழும் 3, 4வது எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 323, 506(2)-ன் கீழும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. | |
| 4. | சம்பவம் நடந்த நாள் | 01/01/2022 | |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | 02/01/2022 | |
| 6. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | இல்லை | முன்பிணை பெற்ற நாள்: 07/01/2022 |
| | பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | இல்லை | |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 30/05/2023 | |

<table>
<tr><td>8.</td><td>கு.வி.மு.ச பிரிவு 241-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள்</td><td colspan="3">13/06/2025</td></tr>
<tr><td>9.</td><td>கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="3">-----</td></tr>
<tr><td rowspan="5">10.</td><td rowspan="5">வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>17/02/2026</td><td>17/02/2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>17/02/2026</td><td>17/02/2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>17/02/2026</td><td>17/02/2026</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>20/02/2026</td><td>20/02/2026</td></tr>
<tr><td>11.</td><td>எதிரியிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள்</td><td colspan="3">20/04/2026</td></tr>
<tr><td rowspan="2">12.</td><td rowspan="2">எதிரிகளின் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள்</td><td colspan="2">பிடியாணை வழங்கப்பட்ட நாள்</td><td>பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள்</td></tr>
<tr><td colspan="2">------</td><td>-----</td></tr>
<tr><td>13.</td><td>வழக்கு விசாரணை தொடங்கிய நாள்</td><td colspan="3">13/06/2025</td></tr>
<tr><td>14.</td><td>வழக்கு விசாரணை முடிந்த நாள்</td><td colspan="3">20/04/2026</td></tr>
<tr><td>15.</td><td>தீர்ப்பு பகரப்பட்ட நாள்</td><td colspan="3">22/04/2026</td></tr>
<tr><td>16.</td><td>தீர்வு</td><td colspan="3">முடிவாக, 1,2வது எதிரிகள் இதச</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | **பிரிவுகள்** 147, 294(b), 326, 323, 506(2) **மற்றும் பிரிவு** 4 of TNPHW Act-**ன் கீழும்** 3,4**வது எதிரிகள் இதச பிரிவுகள்** 147, 323, 506(2)-**ன் கீழும் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து எதிரிகளை மேற்படி குற்றச்சாட்டுகளை பொறுத்து பி.என்.எஸ்.எஸ் பிரிவு** 271(1)-**ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.** |

இந்த வழக்கானது என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.மீனாட்சிசுந்தரம், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

**1. குற்றமுறையீட்டின் சுருக்கம்:-**

கடந்த 01/01/2022–ம் தேதி மதியம் 13.30 மணியளவில் வாதி, வாதியின் அப்பா மற்றும் வாதியின் அம்மா ஆகியோர் வீட்டில் இருந்தபோது 1வது எதிரி பின்னலாங்கோட்டை கிராமத்தில் உள்ள சாட்சி 2 –ன் வீட்டின் முன்பு நின்று எவண்டா உள்ளே வெளியே வாடா நோத்தாளக்க தேவுடியா மகனே என்று பொது வெளியில் அசிங்கமாகவும் அறுவருக்கத்தக்க வகையில் திட்டியதாகவும், அதே கேட்ட சாட்சி–1 1–ம் எதிரியைப் பார்த்து ஏன் இப்படி அசிங்கமாக பேசுகிறாய்

என்று கேட்டதாகவும் அப்போது 1வது எதிரி கையில் மறைத்து வைத்திருந்த கம்பால் சாட்சி 1–ன் தலையிலும் இடுப்பிலும் அடித்தும் பின்னர் அருகில் கிடந்த கம்பியை எடுத்து வலது கையில் ஓங்கி அடித்ததாகவும் 2வது எதிரி கையில் கட்டையுடன் ஓடி வந்து ஏண்டி புண்டா மகளே என்று அசிங்கமாக பேசி கட்டையால் 1வது சாட்சியின் இடுப்பிலும் முதுகிலும் அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தி கீழே தள்ளி மிதித்ததாகவும், 3,4வது எதிரிகள் இருவரும் ஓடி வந்து சாட்சி 1ன் தலை முடியைப் பிடித்து இழுத்து கீழே தள்ளி கையால் நெஞ்சில் குத்தி அருகில் கிடந்த மட்டையை எடுத்து சாட்சி 1ன் தலை மற்றும் உடம்பில் அடித்து ஊமைக்காயத்தை ஏற்படுத்தியதாகவும், வலிதாங்காமல் சாட்சி 1 கத்தியதால் சாட்சி 2 ஓடி வந்து ஏண்டா என் மகளை இப்படி அடிக்கிறீங்க என்று கேட்டதாகவும், அதற்கு 1,2வது எதிரிகள் சேர்ந்து அப்படி தான்டா அடிப்போம் என்று கம்பால் மாறி மாறி அடித்ததில் சாட்சி 2–க்கு தலை, வலது கை மற்றும் இடுப்பு ஆகிய இடங்களில் வீக்க காயம் ஏற்றபட்டதாகவும், அப்போது சாட்சி 1–ன் இரண்டு வயது ஆண் குழந்தை இடுப்பில் இருந்தபோதிலும் மீண்டும் பொது இடத்தில் வைத்து சாட்சி 1–ன் சுடிதாரை 1,2வது எதிரிகள் இழுத்து மானபங்கப்படுத்தியதாகவும் அப்போது குழந்தை கீழே விழவே அதனைக் காப்பாற்ற வந்த சாட்சி 3ஐ சேலையை பிடித்து முறுக்கி கீழே தள்ளிவிட்டு காலால் மிதித்ததாகவும் மேலும் இந்த சம்பவத்தின்போது திலகவதியின் கணவர் 5வது எதிரி அசிங்கமாக பேசி அடிக்க வந்ததாகவும், பின்னர் சாட்சிகள் 4, 5 ஆகியோர் வந்து சத்தம்போட்டு விலக்கி விட்டபோது 1 முதல் 4 வரையிலான எதிரிகள் கையில் கம்பு மற்றும் கட்டைக்கம்பினை வைத்துக்கொண்டு இனிமேல் எங்களிடம் மோதினால் உங்களை அடித்துக் கொல்லாமல் விடமாட்டோம் என மிரட்டிய குற்றத்திற்காக 1,2வது எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 294(b), 326, 506(2) & S. 4 of TNPHW Act-ன் கீழும் 3,4வது எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 294(b), 323, 506(2)-ன் கீழும் 5வது எதிரி

பெரியசாமி மீது இதச பிரிவுகள் 147, 294(b)-ன் கீழும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 இன் படி எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் 1,2வது எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 294(b), 326, 323, 506(2) மற்றும் பிரிவு 4 of TNPHW Act-ன் கீழும் 3,4 வது எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 323, 506(2)-ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி வினவிய போது எதிரிகள் குற்றங்களை மறுத்துரைத்தார்கள். எனவே அரசு தரப்பு சாட்சியங்களின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

(5.1) அ.சா.4 செல்வம் தனது சாட்சியத்தில் இவ்வழக்கில் புலன்விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் மகாராஜா புலன்விசாரணை மேற்கொண்டு குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்து முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3ஆகவும், பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.4 மற்றும் 5ஆகவும், அ.சா.1ன் விபத்து பதிவேடு மற்றும் அதன்பின்புறம் காயத்தின் தன்மை குறித்து கருத்துரை

அடங்கிய சான்று அ.சா.ஆ.6ஆகவும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

6. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்தும், ஆவணங்களிலிருந்தும் எதிரிகளுக்கு பாதகமாகத் தோன்றும் அம்சங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து பி.என்.எஸ்.எஸ் பிரிவு 351(1)(b) இன் கீழ் வினவ எதிரிகள் சாட்சியங்களை பொய் என மறுத்துரைத்தார்கள். மேலும் எதிரிகள் தமது தரப்பில் சாட்சியங்கள் இல்லை என்று தெரிவித்ததன் அடிப்படையில் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால், அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்?

**8. தீர்வு**

(8.1) இவ்வழக்கின் புகார்தாரரும் காயம்பட்டவருமான அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் தனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றும் புகார் தான் தான் கொடுத்ததாகவும் அதில் உள்ள விபரங்கள் என்ன என்று தெரியாது என்று அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கில் மற்றொரு காயம்பட்ட சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் வழக்கு சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் எந்த பிரச்சனையும் நடக்கவில்லை என்றும் பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார். அதேபோல் மற்றொரு பாதிக்கப்பட்ட சாட்சியாக

விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.3 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார்.

(8.2) இவ்வழக்கில் அரசு தரப்பில் பாதிக்கப்பட்டவர்களாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 முதல் 3 வரையிலானவர்களே அரசு தரப்பு வழக்கை வலியுறுத்தும் விதமாக சாட்சியம் அளிக்காத நிலையில் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் விதமாக அரசு தரப்பில் வேறு எந்த சாட்சியங்களும் அமையவில்லை. அ.சா.4 சிறப்பு சார்பு ஆய்வாளர் ஒரு காவல்துறை சாட்சியாக இருப்பதால் அவருடைய சாட்சியத்தை மட்டுமே கொண்டு எதிரிகளை தண்டிப்பது என்பது இயற்கை நீதிக்கு முரணானதாகும்.

(8.3) எதிரிகள் மீது சாட்டப்படும் ஒவ்வொரு குற்றச்சாட்டும் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடம் இன்றி நிரூபிக்கப்பட வேண்டும். இவ்வழக்கின் புகார்தாரரும் காயம்பட்டவருமான அ.சா.1ன்றே புகாரில் உள்ள குற்றச்சாட்டுகளை வலியுறுத்தி சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியாக சாட்சியமளித்துள்ளதும் பாதிக்கப்பட்டவர்களான அ.சா.2, அ.சா.3 ஆகியோர்களும் அரசு தரப்பிற்கு விரோதமாக பிறழ்சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளதே அரசு தரப்பால் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்க இயலாததற்கான காரணமாகும். எனவே எதிரிகள் சந்தேகத்தின் பலனை பெற தகுதி உடையவர்கள் ஆகிறார்கள். எனவே எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**9) முடிவாக, 1,2வது எதிரிகள் இதச பிரிவுகள் 147, 294(b), 326, 323, 506(2) மற்றும் பிரிவு 4 of TNPHW Act-ன் கீழும் 3,4வது எதிரிகள் இதச பிரிவுகள் 147, 323, 506(2)-ன் கீழும் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து எதிரிகளை மேற்படி குற்றச்சாட்டுகளை பொறுத்து பி.என்.எஸ்.எஸ் பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22-ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

POORNIMA Digitally signed by POORNIMA Date: 2026.04.22 17:55:21 +0530

**நீதித்துறை நடுவர்**
**தேவகோட்டை.**

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| S.No | Witness of the Prosecution | How examined | Description of the Witness |
|---|---|---|---|
| 1. | பாண்டிச்செல்வி | அ.சா.1 | புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்ட சாட்சி |
| 2. | காந்தி | அ.சா.2 | பாதிக்கப்பட்ட சாட்சி |
| 3. | மீனாள் | அ.சா.3 | கண்ணுற்ற சாட்சி |
| 4. | செல்வம் (சிறப்பு சார்பு ஆய்வாளர்) | அ.சா.4 | தற்போதைய விசாரணை அதிகாரி |

**Judicial Form No. 68**

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| S.No | Description of the exhibit | Date when the exhibit was filed in | How marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | the case | | | |
| 1. | புகாரில் உள்ள கையொப்பம் | 17/02/2026 | அ.சா.ஆ.1 | அரசு தரப்பு | அசல் |
| 2. | புகாரில் உள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து | 17/02/2026 | அ.சா.ஆ.2 | அரசு தரப்பு | அசல் |
| 3. | முதல் தகவல் அறிக்கை | 20/02/2026 | அ.சா.ஆ.3 | அரசு தரப்பு | அசல் |
| 4. | பார்வை மகஜர் | 20/02/2026 | அ.சா.ஆ.4 | அரசு தரப்பு | அசல் |
| 5. | மாதிரி வரைபடம் | 20/02/2026 | அ.சா.ஆ.5 | அரசு தரப்பு | அசல் |
| 6. | அ.சா.1ன் விபத்து பதிவேடு மற்றும் அதன் பின்புறம் காயத்தின் தன்மை குறித்து கருத்துரை அடங்கிய சான்று | 20/02/2026 | அ.சா.ஆ.6 | அரசு தரப்பு | அசல் |
| 7. | சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை | 20/02/2026 | அ.சா.ஆ.7 | அரசு தரப்பு | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள்: இல்லை**

**எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்றுப் பொருள் - இல்லை**

POORNIMA Digitally signed by POORNIMA Date: 2026.04.22 17:55:30 +0530

**நீதித்துறை நடுவர்**
**தேவகோட்டை.**

**பின்குறிப்பு:-**

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்.
2. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
3.விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.